**மலர் சாகுபடிக்கு மானியம்**

First Published : 14 Jul 2010 12:17:58 PM IST

கடையநல்லூர், ஜூலை 13: கடையநல்லூர் வட்டாரத்தில் மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுவதாக தோட்டக்கலை உதவி இயக்குநர் லி. அழகிரிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கடையநல்லூர் வட்டாரத்தில் கேந்தி, பிச்சி, மல்லி, செவ்வந்தி, சம்பங்கி, அரளி போன்ற மலர்கள் விவசாயிகளால் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இம் மலர் சாகுபடியைச் செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.12,000 வரை வழங்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.7,920 அளிக்கப்படும்.

எனவே, மானியத்தைப் பெற விரும்பும் விவசாயிகள் 10-1 சிட்டா நகல், அடங்கல் படிவம், குடும்ப அட்டை நகல், 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றுடன் தோட்டக்கலை உதவி இயக்குநரை அணுகலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**மலர் சாகுபடிக்கு மானியம்**

First Published : 14 Jul 2010 12:17:58 PM IST

கடையநல்லூர், ஜூலை 13: கடையநல்லூர் வட்டாரத்தில் மலர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுவதாக தோட்டக்கலை உதவி இயக்குநர் லி. அழகிரிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கடையநல்லூர் வட்டாரத்தில் கேந்தி, பிச்சி, மல்லி, செவ்வந்தி, சம்பங்கி, அரளி போன்ற மலர்கள் விவசாயிகளால் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இம் மலர் சாகுபடியைச் செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.12,000 வரை வழங்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.7,920 அளிக்கப்படும்.

எனவே, மானியத்தைப் பெற விரும்பும் விவசாயிகள் 10-1 சிட்டா நகல், அடங்கல் படிவம், குடும்ப அட்டை நகல், 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றுடன் தோட்டக்கலை உதவி இயக்குநரை அணுகலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**நாகர்கோவிலில் ஜூலை 23-ல் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம்**

First Published : 14 Jul 2010 11:58:21 AM IST

நாகர்கோவில், ஜூலை 13: நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜூலை 23-ம் தேதி விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம் நடைபெறுகிறது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

குமரி மாவட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை தினக் கூட்டம் ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் ஜூலை 23-ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறுகிறது.

ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் ஜூன் மாத கூட்டத்தில் விவசாயிகள் அளித்த கோரிக்கை மனுக்களுக்கான பதில்கள் வழங்கப்படும்.

மேலும் விவசாயிகளின், விவசாயம் தொடர்பான கோரிக்கைகளும் ஆட்சியரால் பெறப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாமக்கல்லில் நாளை முதல் 2 நாள் மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 14 Jul 2010 10:15:15 AM IST

நாமக்கல், ஜூலை 13: நாமக்கல் மாவட்டத்தில் வியாழன், வெள்ளி ஆகிய இருநாட்களும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வானிலை ஆய்வு மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்தி:

ஜூலை 14,1 5, 16 ஆகிய மூன்று நாட்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில் வானம் பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். வியாழக்கிழமை 3 மி.மீ., வெள்ளிக்கிழமை 5 மி.மீ. மழை பெய்யும். காற்றின் வேகம் மணிக்கு 4, 6 கி.மீ. வேகத்தில் மேற்கிலிருந்து வீசும். வெப்பநிலை அதிகபட்சமாக 91.4 சதமாகவும், குறைந்தபட்சமாக 73.4 சதமாகவும் காணப்படும்.

காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 87 சதமாகவும், குறைந்தபட்சம் 60 சதமாகவும் காணப்படும்.

கோழிப் பண்ணைகளுக்கான சிறப்பு வானிலை

நாமக்கல் மண்டலத்தில் உள்ள கோழிப் பண்ணைகளுக்கான அடுத்த 3 நாட்களுக்கான வானிலையில், தென்மேற்கு பருவமழையின் தாக்கத்தால் வானம் தொடர்ந்து மேகமூட்டத்துடன், பெரும்பாலான இடங்களில் சிறுமழைக்கான வாய்ப்புகளும் காணப்படும். பகல் மற்றும் இரவு நேர வெப்ப அளவுகள் குறைந்தும், காற்றின் ஈரப்பதம் அதிகரித்தும் காணப்படும். தொடர்ந்து பரவலான மழை பெய்யும் என்பதால் கோழிகளுக்கான சுற்றுப் புற சுகாதாரம், குடிநீரின் தரம் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். கோழிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்பயன்படுத்தப்படும் மேல்நிலை நீர்த்தொட்டி குழாய் மற்றும் அதன் பகுதிகளில் கிருமிநாசினி மருந்துகளை பயன்படுத்தி சுத்தம் செய்ய வேண்டும்.

**விலைவாசி உயர்வு பிரச்னை: நாடாளுமன்றத்தில் அரசை முடக்க தேசிய ஜனநாயக கூட்டணி திட்டம்**

First Published : 14 Jul 2010 01:41:27 AM IST

Last Updated : 14 Jul 2010 03:21:03 AM IST



புதுதில்லி, ஜூலை 13: ஜூலை 5ம் தேதி நடத்திய நாடு தழுவிய பாரத் பந்த் போராட்டத்தைத் தொடர்ந்து, விலைவாசி பிரச்னையில் ஆளும் கூட்டணி அரசுக்கு நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் நிர்பந்தம் தருவது என தேசிய ஜனநாயகக் கூட்டணி திட்டமிட்டுள்ளது.

பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தியதை அடுத்து அதை வாபஸ் பெறக்கோரி எதிர்க்கட்சிகள் போர்க்கொடி உயர்த்தியுள்ளன.

இடதுசாரிகளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் தனித்தனியாக ஜூலை 5ம் தேதி பாரத் பந்த் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன.

இதில் சமாஜவாதி கட்சி, அதிமுக, மதிமுக போன்றவை பங்கேற்றன. நாடு தழுவிய அளவில் நடந்த இந்த போராட்டம் பல மாநிலங்களில் வெற்றிகரமாக அமைந்தது. இந்த போராட்டத்தின் மூலம் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை வெளிப்பட்டுள்ளது என எதிர்க்கட்சிகள் மகிழ்ச்சியில் உள்ளன. ஆளும் கூட்டணி அரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் இந்த ஒற்றுமை, மழைக்காலக் கூட்டத்தொடரிலும் வெளிப் படவேண்டும் என்பதில் முனைப்பாக உள்ளது தேசிய ஜனநாயக கூட்டணி. இந்நிலையில் சரத் யாதவ் நிருபர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது: பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கைவிடும்படி நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பும்போது பாரத் பந்த் போராட்டத்தில் பங்கேற்காத பகுஜன் சமாஜ் கட்சி, ராஷ்ட்ரீய ஜனதா தளம் ஆகியவையும் இணையும் என்று எதிர்பார்க்கிறோம்.

விலை உயர்வு என்பது ஒரு கட்சியை மட்டும் சார்ந்ததல்ல. மக்கள் சம்மந்தப்பட்ட பொதுப்பிரச்னையாகும். மக்களின் பிரச்னை மீது அக்கறை காட்டும் எல்லா கட்சிகளும் நாடாளுமன்றத்தில் ஆளும் கூட்டணிக்கு எதிராக நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு துணை நிற்க வேண்டும். பெட்ரோல், டீசல் விலை உயர்வை வாபஸ் பெறும்படி ஆளும் கூட்டணி அரசை நாடாளுமன்றத்தில் நிர்பந்திக்க வேண்டும். இப்போதைய நிலையில் ஒரு கட்சியோ அல்லது தனி நபரோ தலைவரல்ல. நாம் எழுப்பும் பிரச்னைதான் பிரதானமானது. பிரச்னைகள் மீது எதிர்க்கட்சிகள் காட்டும் ஒற்றுமை எதிர்காலத்தில் மேலும் வலுப்பெறவேண்டும்.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில் பெட்ரோல்,டீசல் விலை உயர்வு பிரச்னையில் எதிர்க்கட்சிகள் ஆளும் கூட்டணி அரசை கலங்கடிக்கவேண்டும்.

ஜூலை 5ம் தேதி நடந்த பாரத் பந்த் சுதந்திர இந்தியா இதுவரை பார்த்திராத ஒன்று. ஐக்கிய முற்போக்குக்கூட்டணி அரசின் 6 ஆண்டு கால ஆட்சியில் அதற்கு எதிராக நடத்தப்பட்ட முதல் மிகப்பெரிய போராட்டம் பாரத் பந்த்.

தலைபோகும் பிரச்னைகளை ஒதுக்கிவிட்டு இடதுசாரிகளும் பாஜகவும் ஒன்றாக சேர்ந்துவிட்டதாக காங்கிரஸ் கூறும் விமர்சனம் ஏற்கத்தக்கதல்ல. மதச்சார்பின்மை என்று கூறி முக்கிய பிரச்னைகளை மூடி மறைக்க பார்க்கிறது ஆளும் கூட்டணி அரசு. பற்றிஎரியும் பிரச்னைகளை மூடி மறைக்க மதச்சார்பின்மை கோஷத்தை எழுப்புகிறது காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு.

பாரத் பந்த் போராட்டத்தில் எதிர்க்கட்சிகள் இணைந்ததை கண்டு அதிர்ந்துபோயுள்ள காங்கிரஸ் கூட்டணி அரசு இந்த ஒற்றுமையை கலைக்க முயற்சிக்கக்கூடும் என்றார் சரத் யாதவ்.

தினமலர்

**வெலிங்டன் ஏரிக்கரை சீரமைப்பு பணி தாமதம்! மாற்று வழி ஏற்படுத்த விவசாயிகள் கோரிக்கை**

திட்டக்குடி: திட்டக்குடி வெலிங் டன் ஏரி கரைகள் சீரமைப்பு பணி பருவமழைக்கு முன்னதாக நிறைவடையுமா என விவசாயிகள் ஏக்கத்தில் உள்ளனர். திட்டக்குடி அடுத்த கீழ்ச்செருவாய் கிராமத்தில் உள்ள 2580 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்டு வெலிங்டன் ஏரி மூலம் திட்டக்குடி, விருத் தாசலம் தாலுகாக்களை சேர்ந்த 25 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தது. இதன் மூலம் இப்பகுதியை சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்களும், 15 ஆயிரம் விவசாய தொழிலாளர்களும், பயனடைந்து வந்தனர். நீர் வரத்து காரணமாக ஏரி தூர்ந்ததால் நீர் பிடிப்பு 1485.72 மில்லியன் கன அடியாக குறைந்தது. கடந்த 2008 ஜனவரி 3ம் தேதி வெலிங்டன் ஏரியிலிருந்து பாசனத்திற்கு தண் ணீர் திறந்து விட்ட அப் போதைய கலெக்டர் ராஜேந்திர ரத்னு, ஏரியின் கொள்ளளவை அதிகப்படுத்திட தொழில்நுட்ப நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் கரைகள் பலப்படுத்தி கான்கிரீட் தளத்துடன் கூடிய திருகு ஷட்டர்கள் அமைத்து , பாசன வாய்க்கால்கள் சீரமைக்கப்பட உள்ளது என்றார். அதன்படி பாசன ஏரிகள் மற்றும் பாசன வாய்க்கால் களை சீரமைக்க மாவட்ட பொது நிதியிலிருந்து 1.40 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டது.

இந்நிலையில் தமிழக அரசு வெலிங்க்டன் ஏரியில் வலுவிழந்த 800 மீட் டர் தூர் கரையை பலப்படுத்தி சீரமைக்க 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியது. அதனையொட்டி கரை சீரமைப்பு பணிக்கு கடந்த 2009 மே மாதம் 5ம் தேதி பூமி பூஜை போடப்பட் டது. கரை சீரமைப்பு பணிக்காக 18 மாதங்கள் ஏரியில் நீர் பிடிப்பு நிறுத் தப்படும் என அறிவிக் கப்பட்டது.

மேலும் ஏரியில் தேங்கியிருந்த தண்ணீரை வெளியேற்றி ஏரியின் உட்புறம் தற்காலிக தடுப்பு சுவரான "காப்பர் டேம்' ( சவுக்கு மரங்கள், மணல் மூட்டைகள் அடுக்கிய) அமைக்கப் பட்டது. இதற்காக கரையின் வெளிப்பகுதியில் அதிகளவு மணல் தோண்டியதால் 400 மீட்டர் தூரத் திற்கு கரை உள்வாங்கியது. இதனால் 15க்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை உருவானது.இதுகுறித்து எம்.எல். ஏ., செல்வப்பெருந்தகை முதல்வரிடம் முறையிட் டதை தொடர்ந்து பொதுப் பணித்துறை முதன்மை தலைமை பொறியாளர் ஜெயராமன் தலைமையிலான சிறப்புக் குழுவினர் ஏரியின் கரைப் பகுதிகளை ஆய்வு செய்த பின் பணிகள் தொடர்ந்தன.

இந்நிலையில் கரையை பலப்படுத்த கீழ்ச்செருவாய், ஆக்கனூர் உள் ளிட்ட பகுதிகளிலிருந்து களிமண் எடுத்து வருவதாலும், சீரமைப்பு தூரம் 83 மீட்டர் அதிகரித்துள்ளதாலும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என ஒப்பந்ததாரர் சில வாரங்களுக்கு முன் பணியை நிறுத் தினார்.அதிருப்தியடைந்த விவசாயிகள் இப் பிரச்னை குறித்து அரசின் கவனத் திற்கு கொண்டு சென்றனர். ஏரியை பார் வையிட்ட பொதுப்பணித் துறை முதன்மை பொறியாளர் ராமசுந்தரம், கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து தற்போது பணிகள் நடந்து வருகிறது. இந்நிலையில் வடகிழக்கு பருவமழை துவங்க சில

மாதங்களே உள்ளதால் கரைப்பகுதி முழுமையாக சீரமைத்து நீர்ப்பிடிப்பு செய்யப்படுமா என சந்தேகம் எழுந்துள்ளது.

தற்போது கரையின் உட்புறம் கருங்கல் பதிக் கும் பணி 300 மீட்டருக் கும், மேல்புறம் 8.5 அடிக்கு களிமண் கொட்டி கரையை பலப்படுத்தும் பணியும் மீதமுள்ளது. இப் பணிகள் வருகிற ஆகஸ்ட் 15ம் தேதிக்குள் முடிக்கப்படும் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்ப ட்டாலும், விவசாயிகள் ஏற்க மறுக்கின்றனர். இரண்டு ஆண்டாக ஏரியில் தண்ணீர் இல்லாததால் நிலங்களில் பயிரிட முடியாமல் பாதிக்கப் பட்ட இப்பகுதி விவசாயிகள், இந்த ஆண்டும் நீர்ப்பிடிப்பு செய்ய முடியாத நிலை ஏற்படுமோ என அச்சத்தில் உள்ளனர். எனவே மாற்று வழியாக விவசாய நிலங்களில் மின்இணைப்பு கோரி மனு அளித்துள்ள விவசாயிகளுக்கு முன்னுரிமை, பம்பு செட்டுகள் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண் டும். நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச "ஆயில் எஞ்சின்' பயன்படுத்த நினைக்கும் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன்களை வங்கிகள் மூலம் வழங்கிட மாவட்ட நிர்வாகம், அரசுக்கு பரிந் துரை செய்ய வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

சொன்னதை மறந்த எம்.எல்.ஏ.,!வெலிங்டன் ஏரிக்கரை சீரமைப்பு பணி பல்வேறு காரணங்களால் தடைபட்டு மீண்டும் நடைபெற்று வருகிறது. இதில் திருப்தியடையாத விவசாயிகள், பாசன சங்கத் தலைவர்கள் எம்.எல்.ஏ., செல்வபெருந்தகையிடம் முறையிட்டனர். அதன்பேரில் கடந்த மாதம் ஏரிக்கரை சீரமைப்பு பணியை நேரில் பார்வையிட்ட எம்.எல்.ஏ., பணியை ஜூலை 8ம் தேதிக்குள் முடிக்க வேண்டும். இல்லை எனில் திட்டக்குடி பகுதி விவசாயிகளை திரட்டி, ஏரி சீரமைப்பு பணியை டெண்டர் எடுத்துள்ள காண்ட்ராக்டர் வீடு நோக்கி நடைபயணம் நடத்தப்படும் என எச்சரித்திருந்தார். அவர் விடுத்த காலக்கெடு முடிந்து ஒரு வாரமாகியும் பணிகள் இன்னமும் முடிந்தபாடில்லை.

**விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் கடலூரில் நாளை நடக்கிறது**

கடலூர்: விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் கடலூரில் நாளை 16ம் தேதி நடக்கிறது. விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் கடலூரில் மாவட்ட வளர்ச்சி மன்ற கூடத்தில் நாளை 16ம் தேதி நடக்கிறது. கலெக்டர் சீத்தாராமன் தலைமை தாங்குகிறார். கூட்டத்தில் கடலூர் மாவட்ட விவசாயிகள் தங்கள் வேளாண்மை சார்ந்த குறைகளை, கோரிக்கைகளை கூறலாம். கோரிக்கைளை மனுவாகவும் கொடுக்கலாம். குறைகளுக்கு சம் மந்தப்பட்ட துறை உயர் அலுவலர்கள் மூலம் உரிய பதிலும், நடவடிக்கையும் எடுக்கப் படும். இத்தகவலை கலெக்டர் சீத்தாராமன் தெரிவித்துள்ளார்.

**சேத்தியாத்தோப்பில் தரமற்ற விதை நெல் நடவடிக்கை எடுக்க கோரி மனு**

சேத்தியாத்தோப்பு: சேத்தியாத்தோப்பில் தரமற்ற விதை நெல் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்து விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்க அ.தி.மு.க., மாவட்ட விவசாய பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அ.தி.மு.க., விவசாய பிரிவு இணை செயலாளர் அப்பாதுரை, கலெக்டர் மற்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள மனு: சேத்தியாத்தோப்பில் விதைகள் மற்றும் பூச்சிக்கொல்லி

மருந்துகள் விற்பனை செய்யும் தனியார் கடைகளில் அரசு சான்றிதழ் பெறாத மற்றும் தரமற்ற விதைகள் கவர்ச்சியான கவர்களில் பேக் செய்து விற்பனை செய்து வருகின்றனர். ஒரு சில கடை உரிமையாளர்கள் வேளாண்மைத் துறை அதிகாரிகளின் துணையுடன் அவர்களிடமிருந்து விதைகளைப் பெற்று விவசாயிகளிடம் கூடுதல் விலைக்கு விற்று வருகின்றனர்.

அதேப் போன்று பூச்சிக் கொல்லி மருந்துகளில் காலாவதியான மருந்துகள், போலி மருந்துகளை விவசாயிகளிடம் கொடுத்து ஏமாற்றி வருகின்றனர். இதனால் அப்பாவி விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். மேலும், வேளாண்மை பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் கை தெளிப் பான் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங் கப்படும் பொருள்கள் யாவும் இந்த தனியார் மருந்து கடைகளில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.எனவே, இப்பிரச்னையில் உரிய சோதனைகளை மேற்கொண்டு போலி விதை மற்றும் பூச்சிக் கொல்லி மருந்து விற்பனை செய்வோர் மீது உரிய விசாரணை செய்து அவர்களின் உரிமத்தை ரத்து செய்திடவும் நடவடிக்கை எடுத்து இப்பகுதி அப்பாவி விவசாயிகளை காப்பாற்ற வேண்டும்.இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**சாகுபடி காலத்தில் இடு பொருட்கள் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

கடலூர்: செம்மை நெல் சாகுபடி நேரத்தில் இடு பொருட் களை வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள் ளனர். கடலூர் செம்மண்டலம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட் புக் கூட்டம் நடந்தது. இணை இயக்குநர் இளங்கோவன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் அண்ணாகிராம பகுதியைச் சேர்ந்த விவசாயி வரதன், 'உளுந்து பயிருக்கு காலத்தில் மானியம் வழங்க வேண்டும். காலத்தில் வழங்காததால் விவசாயிகளுக்கு திட்டம் பயனற்று போகிறது. எனவே, மானியத்தை விரை வாக வழங்க வேண்டும்' என தெரிவித்தார்.

மேல்பட்டாம்பாக்கம் விவசாயி சேகர், "செம்மை நெல் சாகுபடிக்கு குறிப் பிட்ட நேரத்தில் இடு பொருட்கள் வழங்காததால் விவசாயம் பாதிக் கும். எனவே, சாகுபடி நேரத்தில் வழங்க வேண் டும்' என்றார்.திருக்கண்டேஸ்வரம் விவசாயி கோபிநாத், "குறைந்த விதையில் சாகுபடி முறையை பின்பற்ற வேண்டும் என்ற நோக்கத் தில் செம்மை நெல் சாகுபடி முறை அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. இதற் கான விதை ஏக்கருக்கு 5 கிலோ மட்டும் தேவை எனக் கேட்டால் 50 கிலோ தான் உள்ளது என வழங்குகின்றனர். தேவையான அளவு விதைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என கேட்டுக் கொண்டார்.

**தேங்காய் பருப்புவரத்து குறைவு**

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் பெய்யும் மழை காரணமாக தேங்காய் பருப்பு வரத்து குறைந்துள்ளது.
கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நடப்பு வாரம் 180 மூட்டை தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோ 34.89 ரூபாய், குறைந்தபட்சமாக 32.89 ரூபாய், சராசரியாக 33.69 ரூபாய்க்கு விற்றது. கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மிதமான மழை பெய்வதால், தேங்காய் பருப்பை காய வைக்க முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர். இதனால், கடந்த வாரத்தை விட 20 மூட்டை

தேங்காய் பருப்பு குறைவாகவே வந்தது.
கடந்த வாரத்தை விட தேங்காய் பருப்புக்கு நடப்பு வாரம் ஒரு ரூபாய் வரை விலை அதிகரித்திருந்தது.
நடப்பு வாரம்  மூன்று லட்சம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.

**தோட்டக்கலை பண்ணையில் நாற்றுகள் விற்பனைக்கு தயார்**

நாமக்கல்: "கொல்லிமலை அரசு தோட்டக்கலை துறை பண்ணையில் சில்வர் ஓக், காபி, எலுமிச்சை உள்ளிட்ட பல்வேறு மரம், செடிகளின் நாற்றுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன' என, தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கதிரவன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:  கொல்லிமலை தாலுகா அரசு தோட்டக்கலை துறை படசாலை மற்றும்  செம்மேட்டில் பண்ணையில் பல்வேறு நாற்றுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அதன்படி படசாலை பண்ணையில் 60 ஆயிரத்து 565 சில்வர் ஓக் மரக்கன்றுகள், 27 ஆயிரத்து 865 காபி நாற்றுகள், 2, 500 எலுமிச்சை, 500 கிராம்பு, 300 ஓட்டு மா, 37 கொய்யா, செம்மேடு பண்ணையில் 17 ஆயிரத்து 769 சில்வர் ஓக் மரக்கன்றுகள், 10 ஆயிரத்து 415 காபி, 218 எலுமிச்சை, 4,038 அழகு செடிகள், 80 ஒட்டு பலா நாற்றுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அதில் மா, பலா நாற்று 30 ரூõய், கொய்யா நாற்று 12 ரூபாய், கிராம்பு நாற்று 6 ரூபாய், காபி, எலுமிச்சை, அழகு செடிகள் தலா 5 ரூபாயக்கு விற்பனை செய்யப்படுகிறது. தற்போது நாமக்கல் மாவட்டத்தில் நடவுக்கு ஏற்ற சீதோஷண சூழல் நிலவுவதால் நாற்றுகள் தேவைப்படும் விவசாயிகள் உரிய தோட்டக்கலை பண்ணைகளை அணுகி நாற்றுகள் வாங்கிப் பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளின் விபரம் இன்டர்நெட்டில் பதிவு**

ராசிபுரம்: "விவசாயிகளின் அனைத்து விபரங்களையும் இன்டர்நெட்டில் பதிவு செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது' என, எலச்சிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் லோகநாத பிரகாசம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: எலச்சிப்பாளையம் சுற்று வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்  துறை மூலம் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. திட்டங்கள் அவர்களை விரைவில் சென்றடையவும்,  விவசாயிகள் தேவைகள் அறிந்து புதிய திட்டங்களை அமல்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
அதற்காக, எலச்சிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில், விவசாயிகள் அடிப்படை விபரங்களை  சேகரித்து இன்டர் நெட்டில் பதிவு செய்யும் பணி நடக்கிறது.   வேளாண் உதவி அலுவலர்கள் எலச்சிப்பாளையம் சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்கு சென்று அங்குள்ள விவசாயிகளை சந்தித்து மொத்த நிலப்பரப்பு, சாகுபடி துஞ் செய்துள்ள பரப்பு, சர்வே எண், சாகுபடி செய்யும் பயிர்கள், வங்கி கணக்கு உள்ளிட்ட விபரங்கள் சேகரித்து இணையதளத்தில் பதிவு செய்கின்றனர்.  வட்டாரத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களுக்கு வரும் விவசாயிகளிடமும் விபரங்களை சேகரித்து இன்டர் நெட்டில் பதிவு செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ப.வேலூரில் சூடுபறக்குது சோளக்கதிர் விற்பனை**

ப.வேலூர்: ப.வேலூர் கோபிச்செட்டிப்பாளையத்தில் விளையும் சோளக்கதிருக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகரித்துள்ளதால், அவற்றின் விற்பனை சூடுபிடித்துள்ளது. கோபிச்செட்டிப்பாளையத்தில் சோளம் பயிர் பரவலாக பயிரிடப்படுகிறது. அங்கு அறுவடை செய்யப்படும் சோளம் ப.வேலூர் சுல்தான்பேட்டையில் விற்பனை செய்யப்படுகிறது. இந்த சோளக்கதிரின் சுவை அலாதியாக உள்ளது. அதனால் ப.வேலூர் மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகரித்துள்ளது. பத்து ரூபாய்க்கு 5 சோளக்கதிர் வீதம் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து சோளக்கதிர் வியாபாரிகள் கூறியதாவது:
கோபிச்செட்டிப்பாளையத்தில் விவசாயிகளிடம் ஒரு ரூபாய்க்கு வாங்கப்படும் சோளக்கதிர் இப்பகுதியில் 2 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது

**விவசாயிக்கு பாராட்டு செம்மைநெல் சாகுபடியில் ஏக்கருக்கு 61 மூட்டை மகசூல்**

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் அருகே ஒரு ஏக்கர் விளைநிலத்தில் செம்மைநெல் சாகுபடி செய்து, 61 மூட்டை மகசூல் எடுத்த விவசாயிக்கு 4,000 ரூபாய் காசோலை வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது. பள்ளிபாளையம் அருகே தெற்குபாளையம் கிராமத்தில் செம்மை நெல் சாகுபடி செயல்விளக்க திடல் அமைக்கப்பட்டது. குறைந்த விதை, ஒரு நாற்று நடவு, சதுர நடவு, கோனோ மீட்டர் மூலம் களை நிர்வாகம், உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் ஆகிய செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பங்களை பின்பற்றியதால், அந்த விளைநிலத்தில் 61 மூட்டை மகசூல் கிடைத்துள்ளது.
ஒரு ஏக்கரில் 61 மூட்டை மகசூல் எடுத்த விவசாயி நடனசபாபதிக்கு மத்திய இணையமைச்சர் காந்திசெல்வன் 4,000 ரூபாய்க்கான காசோலையை வழங்கி பாராட்டினார். பள்ளிபாளையம் யூனியன் சேர்மன் பாலு, குப்பாண்டபாளையம் பஞ்சாயத்து தலைவர் வேல்முருகன், காடச்சநல்லூர் பஞ்சாயத்து தலைவர் முனியப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெங்காய பயிரில் "இலைப்பேன்' தாக்குதல் கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி அட்வைஸ்**

கரூர்: கிருஷ்ணராயபுரம் தாலுகாவில் வெங்காய சாகுபடியில் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது: கிருஷ்ணராயபுரம் பகுதியில் புதுப்பட்டி, அழகாபுரி, பூவாம்பாடி, பழைய ஜெயங்கொண்டம், பாப்பக்காப்பட்டி, பஞ்சப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பயிரில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. வெளிர் மஞ்சள் நிறத்தில் காணப்படும் இப்பூச்சி இலைகளை சுரண்டி சாற்றை உறிஞ்சிவிடும். இதனால், இலைகளில் வெண் திட்டுகளாக காணப்படும்.
இவற்றைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 200 மில்லி "மீதைல் டெமொட்டான்' அல்லது 125 மில்லி "பாஸ்போமிடான்' அல்லது 375 மில்லி "மானோ குரோட்டோபாஸ்' பூச்சி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம். அதிகம் தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். சாம்மல் நிற ஈக்களை கட்டுப்படுத்த "மீதைல் டெமெட்டான்' 25 மில்லி மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து அல்லது "மானோ குரோட்டோபாஸ்' மருந்தை ஒரு மில்லி வீதம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம். வெட்டுப்புழுவை கட்டுப்படுத்த "குளோர்பைரிபாஸ்' 2 மில்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து மண்ணில் ஊற்ற வேண்டும்.

வெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இலைப்பேன், வெங்காய ஈ மற்றும் வெட்டுபுழு காணப்பட்டால் தக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்து, சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**கொடிங்கால் வாய்க்காலில் மழைநீர் வடிந்து செல்வதால் விவசாயம் பாதிப்பு**

குளித்தலை: குளித்தலை பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக இரவில் மழை பெய்து வருவதால், கொடிங்கால் வாய்க்கால்களில் மழைநீர் வடியும் நிலை ஏற்பட்டுள்ளது. மேட்டு மருதூர் கொடிங்கால் வாய்க்கால் கல்லூப்பாலத்தில் செடி கொடிகள் ஆகாயத்தாமரைகள் தேக்கமடைகிறது. த்ல்லூரி பாலத்தில் தண்ணீர் செல்லும் வழி மிகவும் குறுகிய வாழ்வு கொண்டதால் தண்ணீர் போக வழியில்லாமல் தேக்கம் ஏற்படுகிறது. இதனால், மேட்டு மருதூர், குமாரமங்கலம், கூடலூர், மருதூர், வாலாந்தார் பகுதி விளை நிலங்கள் மழைநீரால் பாதிக்கப்பட்டு சேதம் ஏற்படுகிறது.
மழை நீர் தேக்கத்தால் கிராம சாலைகளும் தண்ணீரில் அடித்து செல்லப்படுகிறது. மழைநீர் தேக்கம், பாதிப்புக்களை தடுக்க வேண்டும் என பகுதி விவசாயிகள் பொதுப்பணிதுறை (ஆற்றுப்பாதுகாப்பு) உதவி செயற் பொறியாளர் த்ருநாவுக்கரசுக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, பொதுப்பணித்துறை பணியாளர்கள் மூலம் தேங்கிய ஆகாயத்தாமரைகளை மூங்கில் சவுக்கு மரம் உதவியுடன் ஆகாயதாமரை செடிகளை அகற்றினர். பொதுப்பணித்துறை ஏ.இ., திருநாவுக்கரசு கூறுகையில், ""விவசாயிகள் கொடுத்த தகவலின் படி மழையினால், கரும்பு, வாழை, கோரை பயிற்கள் சேதம் அடையாமல் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கையாக ஆகாயத் தாமரை அகற்றப்பட்டது," என்றார்.

**வேளாண் பல்கலையில் முதல்முறைதமிழில் பட்டமளிப்பு விழா!31 ஆண்டுகால வரலாற்றில் முத்திரை**

கோவை : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நிறைவு பெற்றதை கொண்டாடும் வகையில், கோவை வேளாண் பல்கலையின் 31வது பட்டமளிப்பு விழா தமிழில் நடத்தப்பட்டது. வரும் ஆண்டுகளில் அனைத்து பட்டமளிப்பு விழாக்களும் தமிழில் மட்டுமே நடத்தப்படும் என, பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி தெரிவித்தார்.பளபளக்கும் நீண்ட அங்கி அணிந்து ஆங்கிலத்தில் பட்டமளிப்பு உறுதிமொழி ஏற்கும் ஆங்கிலேயர் காலத்து நடைமுறை, இன்னும் அனைத்து பல்கலைகளிலும் பின்பற்றப்படுகிறது. பட்டம் வழங்குபவரும், பெறுபவர்களும் நீண்ட அங்கி அணிந்து பின்னணி இசைக்கேற்ப மெள்ள நடந்து வருவது முதல், இறுதி வரை நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விலும் ஆங்கிலேயர் கால நடைமுறைகளே பின்பற்றப்படுகின்றன.

இந்நிலையில், "இந்தியாவில் நடைபெறும் பட்டமளிப்பு விழாக்களில் நீண்ட கவுன் அணிந்து ஆங்கிலேயர் கலாச்சாரத்தின்படி பட்டம் பெறுவதை தவிர்க்க வேண்டும்' என, சில மாதங்களுக்கு முன் நடந்த ஒரு பட்டமளிப்பு விழாவில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம்ரமேஷ் தெரிவித்திருந்தார். ஆனாலும் ஆங்கிலத்தில் பட் டமளிப்பு உறுதிமொழி ஏற் கும் பழக்கம் அனைத்து பல்கலை களிலும் பின்பற்றப்பட்டு வருகிற.இதை தவிர்க்கும் விதமாக, கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலையில் நேற்று நடந்த 31வது பட்டமளிப்பு விழா, முழுக்க முழுக்க தமிழிலேயே நடந்தது. பிற மொழி பேசும் சிறப்பு விருந்தினர்கள் மட்டுமே ஆங்கிலத்தில் பேசினர். மாணவர்களுக்கு பட்டம் வழங்கும் படிப்பு உட்பட அனைத்து தகவல்களும்

தமிழில் அறிவிக்கப்பட்டது. வழக்கமாக, பட்டம் பெற்ற மாணவர்கள் ஆங்கிலத்தில் உறுதிமொழி ஏற்பதுதான் வழக்கம். நேற்று நடந்த பட்டமளிப்பு விழாவில், தமிழக வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தூய தமிழில் உறுதி மொழி படித்தார்.

உறுதிமொழி உரையில் "நாங்கள் எண்ணத்தாலும் சொல்லாலும், செயலாலும் எப்பொழுதும் நேர்மையுடன் எங்கள் பணியில் உள்ள கடமைகளைச் செயல்படுத்துவோம். "எங்கள் பல்கலையின் மாண்பையும், எங்கள் பணியில் மேன்மையையும், நேர்மையையும் காப்போம். சமூக ஒழுங்குமுறைகளை கடைபிடித்து அவற்றை முன்னேற்றவும், எங்கள் உடன் வாழும் மாந்தர்களின் நலம் பேணவும், நம் நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் மதசார்பில்லா கொள்கையையும் மேம்படுத்தவும், எங்களின் அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்துவோம் என்றும் உறுதி கூறுகிறோம்' என, வாசிக்கப்பட்டது. அமைச்சர் தமிழில் வாசித்த உறுதிமொழியை அப்படியே மாணவர்கள் பின்பற்றி ஏற்றுக் கொண்டதை பெற்றோர், ஆசிரியர்கள் அனைவரும் கைதட்டி வரவேற்றனர்.பட்டமளிப்பு விழாவில் 61 பேருக்கு வேளாண் படிப்பில் முனைவர் பட்டமும், 280 பேருக்கு முதுநிலை பட்டமும், 684 பேருக்கு இளநிலை பட்டமும், 30 பேருக்கு தொலைநிலை கல்வி பட்டமும் என, மொத்தம் 1,055 மாணவ மாணவியருக்கு பட்டம் வழங்கப்பட்டது.

இளம் அறிவியல் வேளாண் பட்டப்படிப்பில் சிறப்பாக தேர்ச்சி பெற்றமைக்கான பல்கலையின் சிறந்த மாணவர் விருது, சிறந்த மாணவி விருது, பயிர் நோயியல் பாடத் திட்டத்தில் சிறந்த மாணவர் விருது மற்றும் உழவியல் பாடத்திட்டத்தில் சிறந்த மாணவர் விருது ஆகிய நான்கு விருதுகள் புவனேஸ்வரி எனும் மாணவிக்கு வழங்கப்பட்டது.இளம் அறிவியல் தொழில் நுட்ப, உணவு பதனிடும் பொறியியல் பட்டப்படிப்பில் சிறந்த மாணவர் விருது மற்றும் சிறந்த நான்காம் ஆண்டு மாணவருக்கான விருது ஆகிய இரு விருதுகள் மாணவி சரண்யாவுக்கு வழங்கப்பட்டது. இளம் அறிவியல் தோட்டக்கலை பட்டப்படிப்பில் பல்கலையின் சிறந்த மாணவருக்கான விருது மாணவி அமீனாவுக்கும், இளம் அறிவியல் தோட்டக்கலை தொழில் நுட்பப் பட்டப் படிப்பில் பல்கலையின் சிறந்த மாணவருக்கான விருது மாணவி ஜெயந்திக்கும் வழங்கப்பட்டது. இதே போல் வேளாண் மூதறிவியல் பட்டப்படிப்பு, முனைவர் பட்டப்படிப்புகளில் சிறப்பிடங்களை பெற்ற மாணவ, மாணவியருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. விழாவில், பேராசிரியர்கள், ஏராளமான மாணவ, மாணவியர் மற்றும் பெற்றோர் பங்கேற்றனர்.பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறுகையில், ""கோவை வேளாண் பல்கலையில் கடந்த 30 ஆண்டுகளாக பட்டமளிப்பு விழாக்கள் ஆங்கிலத்தில்தான் நடைபெற்று வந்துள்ளது. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடந்த பின் கோவையில் நடைபெறும் முதல் பட்டமளிப்பு விழா என்பதால், 31வது பட்டமளிப்பு விழாவை தமிழில் நடத்த முடிவு செய்தோம். இனி வரும் ஆண்டுகளிலும் வேளாண் பல்கலையில் தமிழில் பட்டமளிப்பு விழா நடத்தும் நடைமுறை தொடரும்," என்றார்.

**வாய்க்கால் சீரமைப்பில் குளறுபடி : விவசாயிகள் புகார்**

சாமளாபுரம் : சாமளாபுரம் வாய்க்கால் சீரமைப்பு பணிகளை சரிவர மேற்கொள்ளவில்லை என, அப்பகுதி விவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.நொய்யல் ஆற்றில், செந்தேவிபாளையம் அணைக்கட்டிலிருந்து ராஜவாய்க்கால் பிரிந்து செந்தேவிபாளையம், கள்ளப்பாளையம், சாமளாபுரம் வழியாக அங்குள்ள

குளத்துக்கு வந்து சேர்கிறது. இந்த வாய்க்கால் 5 கி.மீ., தூரம் உள்ளது. நீண்ட காலமாக முறையான பராமரிப்பில்லாமல் வாய்க்கால் மண் மேடு மற்றும் முட்புதர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு கிடந்தது.இதையடுத்து, சாமளாபுரம் இளைஞர் மன்றம் சார்பில் நிதி திரட்டி, பொதுமக்கள் பங்களிப்புடன் வாய்க்கால் தூர்வாரப்பட்டது. அடுத்ததாக, அப்பகுதி விவசாயிகள் தாங்களாகவே செலவு செய்து வாய்க்காலை தூர்வாரினர். இந்நிலையில் சுழற்சி அடிப்படையில் பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு சார்பில் நடப்பாண்டில் இந்த வாய்க்கால் மற்றும் அணைக்கட்டை தூர்வாரி, சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்காக 20 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நடக்கிறது. இப்பணி முறையாக நடக்கவில்லை என விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.விவசாயிகள் கூறியதாவது:வாய்க்கால் தூர்வாரும் பணியில் 128 மீ., நீளமுள்ள அணைக்கட்டில் 51 மீ., நீளத்துக்கு கான்கிரீட் தடுப்பு சுவர் கட்டுதல், வழங்கு வாய்க்கால் தடுப்பு சுவர் 160 மீ., அமைத்தல், வாய்க்கால் பாதையில் மூன்று இடங்களில் இரும்பு ஷட்டர் அமைத்தல் பணிகள் முடிந்துள்ளன; இப்பணிகளில் எந்த குறையுமில்லை. ஆனால், வழங்குவாய்க்கால் 4 கி.மீ., தூரத்துக்கு ஒரு அடிக்கு ஆழப்படுத்தி, முட்புதர் மற்றும் மண் மேடுகள் அகற்றி, கரைகளை பலப்படுத்த உத்தரவிடப்பட்டது. இதற்கான பணியை ஒப்பந்தாரர் முழுமையாக செய்யவில்லை. வாய்க்காலை ஆழப்படுத்தவே இல்லை. இரண்டு கரைகளிலும் மண்ணை சமன்செய்து பணி செய்யப்பட்டுள்ளது. இதனால், குளத்துக்கு தண்ணீர் வருவது தடைபடும். மழைக்காலம் துவங்கும் முன் பணியை முழுமையாக செய்து முடிக்க வேண்டும். இதற்குரிய நடவடிக்கையை பொதுப் பணித்துறையினர் மேற்கொள்ள வேண்டும்.இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**கம்பம் நகராட்சி இயற்கை உரம் டன்னுக்கு ரூ.200 விலை சரிவு**

கம்பம்: கம்பம் நகராட்சி சுகாதாரப்பிரிவு தயாரிக்கும் இயற்கை உரத்தின் விலையை விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று டன்னுக்கு 200 ரூபாய் வரை குறைத்துள்ளனர். கம்பம் நகராட்சியில் குமுளி ரோட்டில் உள்ள நவீன குப்பைக்கிட்டங்கியில் மக்கும் குப்பைகளை இயற்கை உரமாக தயாரித்து விற்பனை செய்கின்றனர். நெல், வாழை, திராட்சை உட்பட பயிர்களுக்கு உரமாக பயன்படுத்தலாம். கடந்த ஆண்டு முதல் இப்பகுதி விவசாயிகள், நகராட்சி தயாரிக்கும் உரத்தினை கொள்முதல் செய்து தங்களின் விவசாயத்தில் பயன்படுத்தி வருகின்றனர். ஒரு டன் உரம் ரூ. 300 என நகராட்சி நிர்ணயம் செய்து விற்பனை செய்து வந்தது. உரத்தின் விலையை குறைக்க விவசாயிகள் சார்பில் நகராட் சிக்கு கோரிக்கை விடப் பட்டது. அதை தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் ஒரு டன் உரத்தின் விலையை 200 ரூபாய் குறைத்து 100 ரூபாய்க்கு விற்கப்படும் என்று அறிவித்துள்ளது. நகராட்சி சுகாதார அலுவலர் ஜெயராமன் கூறுகையில் "40 டன் உரம் இருப்பு உள்ளது. தேவையுள்ள விவசாயிகள் நகராட்சி அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என கூறியுள்ளார்.

---

தினத் தந்தி

***சர்வதேச அளவில் காபி ஏற்றுமதி 8% சரிவு***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு காபி பருவத்தின் (அக்டோபர்–செப்டம்பர்) இவ்வாண்டு மே வரையிலான எட்டு மாதங்களில், சர்வதேச அளவில் காபி ஏற்றுமதி 8 சதவீதத்திற்கும் மேல் சரிவடைந்து 6.10 கோடி மூட்டைகளாக குறைந்துள்ளது. இது, முந்தைய பருவத்தின் இதே காலத்தில் 6.63 கோடி மூட்டைகளாக இருந்தது. ஒரு மூட்டை என்பது 60 கிலோ காபியைக் கொண்டதாகும்.*
*அராபிகா–ரோபஸ்டா*
*உலக அளவில், அராபிகா மற்றும் ரோபஸ்டா ஆகிய இரண்டு வகை காபி பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகிறது. கணக்கீடு செய்ய எடுத்துக் கொண்ட காலத்தில் அராபிகா ஏற்றுமதி 7.34 சதவீதம் குறைந்து 4.27 கோடி மூட்டைகளாக சரிவடைந்துள்ளது. ரோபஸ்டா ஏற்றுமதி 9.44 சதவீதம் வீழ்ச்சி கண்டு 2.35 கோடி மூட்டைகளாக குறைந்துள்ளது. கடந்த 2008 காலண்டர் ஆண்டில் சர்வதேச அளவில் 9.77 கோடி மூட்டை காபி ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, சென்ற 2009–ஆம் ஆண்டில் 9.55 கோடி மூட்டைகளாக குறைந்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*
*நடப்பு 2010 காலண்டர் ஆண்டில், உலக அளவில் காபி பயன்பாடு 2 சதவீதம் அதிகரிக்கும் என சர்வதேச காபி அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. 2009–ஆம் ஆண்டில் உலகம் முழுவதுமாக 13.20 கோடி மூட்டை காபி பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, நடப்பாண்டில் 13.40 கோடி மூட்டைகளாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த பருவத்தில், உலக அளவில் காபி உற்பத்தி 13.30 கோடியிலிருந்து 13.50 கோடி மூட்டைகளாக உயரும் என்றும் சர்வதேச காபி அமைப்பு தெரிவித்துள்ளது.*
*இந்தியாவின் ஏற்றுமதி*
*நடப்பு பருவத்தில், அக்டோபர் முதல் ஏப்ரல் வரையிலான ஏழு மாதங்களில் நம் நாட்டின் காபி ஏற்றுமதி 29 சதவீதம் உயர்ந்துள்ளது. முழு பருவத்தில் ஏற்றுமதியின் தற்போதைய வேகம் குறைந்து 15 முதல் 20 சதவீதமே அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் 70 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.*
*தற்போதைய பருவத்தில் இந்தியாவின் காபி ஏற்றுமதியின் வளர்ச்சி வேகம் குறையும் நிலை உள்ளது. இது வியட்நாம், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு சாதகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. உலக அளவில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அதிக அளவில் காபியை இறக்குமதி செய்து வருகின்றன. உலக அளவில் காபி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் நம் நாட்டின் பங்களிப்பு சுமார் 4 சதவீத அளவிற்கே உள்ளது.*

***சக்தி சுகர்ஸ், அமால்கமேஷன்ஸ் நிறுவன தலைவர்கள் உள்பட 4 பேருக்கு கவுரவ டாக்டர் பட்டம் கோவை வேளாண் பல்கலைக்கழகம் வழங்கியது***

கோவை,ஜூலை.15–

சக்தி சுகர்ஸ் நிறுவன துணை தலைவர் மாணிக்கம், அமால்கமேஷன்ஸ் குழும தலைவர் சிவசைலம்உள்பட 4 பேருக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் கவுரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

1055 பேருக்கு பட்டம்

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் 31–வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. விழாவில் துணைவேந்தர் முருகேச பூபதி வரவேற்றார்.விழாவுக்கு பல்கலைக்கழக இணைவேந்தரும், வேளாண்மைத்துறை அமைச்சருமான வீரபாண்டி ஆறுமுகம் தலைமை தாங்கி, பல்கலைக்கழகத்தில் நேரடியாக பயின்ற 746 பேருக்கும், தொலை தொடர்பு கல்வி மூலம் பயின்ற 309 பேருக்கும் மொத்தம் 1055 பேருக்கு பட்டங்களை வழங்கி கவுரவித்தார்.

இது தவிர 33 மாணவ–மாணவிகளுக்கு பட்டங்களுடன் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டது. இதில் இளம்அறிவியல் பட்டப்படிப்பில் சிறப்பாக தேர்ச்சி பெற்றதற்காக மாணவி ஜே.புவனேஸ்வரி 4 விருதுகளை பெற்றார்.

33 பேருக்கு விருது

தொழில் நுட்ப, உணவு பதனிடும் பொறியியல் பட்டப்படிப்பில் மாணவி ஜி.சரண்யா, தோட்டக்கலை பட்டப்படிப்பில் மாணவர் அமீனா பிரேம்நாத், தோட்டக்கலை தொழில்நுட்ப பட்டப்படிப்பில் மாணவி ஜெயந்தி பிரேம்குமார், மூதறிவியல் பட்டப்படிப்பில் மாணவி பி.வளர்மதி, வேளாண்மை பட்டப்படிப்பில் மாணவி எம்.நபீஷா, வேளாண் பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறையில் மாணவர் பி.செல்வக்குமார், பயிர் வினையியல் துறையில் மாணவர் எஸ்.கார்த்திக், தோட்டக்கலை பட்டப்படிப்பில் மாணவி எஸ்.ஆனந்தி, வேளாண் பொறியியல் துறையில் மாணவர் அஸ்மிதா ராம்கிருஷ்ணா முரம்கார், தோட்டக்கலை (காய்கறிபயிர்) பட்டப்படிப்பில் மாணவர் வி.தங்கராசு, வணிக நிர்வாகவியல் துறையில் மாணவி பி.வித்யா ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

மற்றும் முனைவர் பட்டப்படிப்பில் வேளாண் நுண்ணுயிரியல் துறையில் எம்.ஜெயபாரதி, தோட்டக்கலை துறையில் எஸ்.பிரியாதேவி. மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில் ஆர்.ராஜேஸ்வரி, வறுமை ஒழிப்பு குறித்த துறையில் சிந்தியா பெர்னான்டஸ், அங்ககப் பொருட்கள் மறு சுழற்சி குறித்த துறையில் இ.பரமேஸ்வரி, வேளாண் பொறியியல் துறையில் ப.சதீஷ்குமார், உழவியல் துறையில் ஏ.செல்வராணி உள்பட மொத்தம் 33 பேருக்கு விருது வழங்கப்பட்டது.

கவுரவ டாக்டர் பட்டம்

முன்னதாக அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், வேளாண்துறை சார்ந்த துறைகளில் சாதனை படைத்த 4 பேருக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கி கவுரவித்தார்.

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் சிறப்பு முதுமுனைவர் பட்டம்( கவுரவ டாக்டர் பட்டம்) பெற்றவர்கள் விவரம் வருமாறு:–

அ.சிவசைலம்

அ.சிவசைலம்(சென்னை அமால்கமேஷன்ஸ் நிறுவன தலைவர்):– சென்னை பல்கலைக்கழகத்தில் வணிகவியல் பட்டம் பெற்றவர். டாப்பே என்ற டிராக்டர் உற்பத்தி நிறுவனத்தை உருவாக்கி நாடெங்கிலும் வேளாண்மையை இயந்திரமயமாக்குதலுக்கு துணை புரிந்தவர். பண்ணை இயந்திர மயமாக்குதல், தரமான வேளாண் இடுபொருள் தயாரிப்பு, தரமான தேயிலை உற்பத்தி, உணவு பதனிடுதல் போன்ற வேளாண்மை சார்ந்த சேவைகளை இவர் வழங்கி வருகிறார். அமால்கமேஷன்ஸ் குழுமத்தின் ஆரம்பகால மொத்த உற்பத்தி ரூ.35 கோடியாக இருந்தது. சிவசைலத்தை தலைவராக கொண்ட பின்னர் அந்த நிறுவனத்தின் மொத்த உற்பத்தி ரூ.7 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது.

வெள்ளையன்

அ.வெள்ளையன்(முருகப்பா கூட்டாண்மை குழும தலைவர்):–

*இவர் இங்கிலாந்து நாட்டில் உள்ள ஆஸ்டன் பல்கலைக்கழகத்தில் தொழிற்சாலை நிர்வாக பட்டயப்படிப்பும், லார்வி பல்கலைக்கழகத்தின் முதுநிலை வர்த்தக கல்வியும் பயின்றார். உயர் தர உரங்கள், மற்றும் பூச்சி, பூஞ்சாணை கொல்லிகளை தயாரிக்கும் கோமண்டல் நிறுவனமானது நாட்டின் பயிர் உரச்சத்து தேவைகளையும், பயிர் பாதுகாப்பையும் உறுதி செய்ய பெரிதும் துணை புரிகிறது. இவர் அந்த நிறுவனத்தின் முழு நேர இயக்குனராக 2002–ல் பொறுப்பேற்று கொண்டதும் 10 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் குறைவாக இருந்த உர உற்பத்தியை சுமார் 30 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தி காட்டி உள்ளார். இந்த குழுமத்தின் சர்க்கரை ஆலையில் எரிசாராயம், மெத்தினால், மற்றும் பல மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயாரித்து இந்திய அளவில் 2–வது பெரிய சர்க்கரை உற்பத்தி நிறுவனமாகவும் திகழ்கிறது.*

*மாணிக்கம்*

*மாணிக்கம்( சக்தி சுகர்ஸ் நிறுவன துணைத்தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்):– இவர் தனது முதுநிலை புள்ளியியல் படிப்பை சென்னை பல்கலைக்கழகத்திலும், முதுநிலை வர்த்தக மேலாண்மை படிப்பை அமெரிக்காவின் மிக்சிகன்பல்கலைக்கழகத்திலும் பயின்றார். இவர் 1980–ம் ஆண்டு ஆனைமலைஸ் பஸ் நிறுவன இயக்குனராக பணியை தொடங்கினார். 1986–ம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி பிரிவுக்கு 2500 டி.சி.டி திறன் கொண்ட சர்க்கரை ஆலையை சிவகங்கையில் அமைத்து பின்னர் அதன் செயல் திறனை 4ஆயிரம் டி.சி.டியாக விரிவடைய செய்தார். 35 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய ஆலையையும் நிறுவினார். பின்னர் இரு மின் உற்பத்தி வசதி கொண்ட 2500 டி.சி.டி செயல் திறன் கூடிய சர்க்கரை ஆலைகளை ஒரிசா மாநிலத்திலும் , மொடக்குறிச்சியிலும் அமைத்தார். ஈரோடு மாவட்டத்தில் உள்ள சர்க்கரை ஆலை கூட்டமைப்பில் பாதிப்பில்லாஎத்தனால் உற்பத்தி செய்வதற்கு வழிகாட்டியாக உள்ளார். சோயா பதனிடும் ஆலையை முதன் முறையாக ஆரம்பித்தவர். பொள்ளாச்சியில் மனக்கடவு என்ற கிராமத்தில் சுமார் 100 எக்டர் பரப்பளவில் வானவராயர் வேளாண்மை கல்லூரி அமைத்திட முயற்சி மேற்கொண்டுள்ளார்.*

*சாந்தி துரைசாமி*

*சாந்தி துரைசாமி(ஈரோடு சக்தி மசாலா குழும இயக்குனர்):– இவர் முதுகலைபட்டதாரி. மதிப்பு கூட்டப்பட்ட பலவகையான உணவு பொருட்களை உற்பத்தி செய்யும் வேளாண் சார்ந்த தொழில் நிறுவனமாக சக்தி மசாலா குழுமத்தின் இயக்குனராக பணியாற்றி வருகிறார். கடந்த 1975–ம் ஆண்டு ரூ.10 ஆயிரம் முதலீட்டில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் இன்று சுமார் ரூ.275 கோடி மதிப்பில் மொத்த உற்பத்தியை எட்டி உள்ளது. இயற்கை வேளாண்மையிலும், சமூக மேம்பாட்டிலும் அதிக ஆர்வம் கொண்டு செயல்பட்டு வருகிறார். 5 ஏக்கர் பரப்பளவில் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து அவற்றை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறார். இதனால் இவருக்கு மரங்களின் காவலன் என்ற விருதும் வழங்கப்பட்டு உள்ளது. சுமார் 180–க்கும் மேற்பட்ட மாற்று திறனாளிகளை பணியமர்த்தி அவர்தம் வாழ்வு சிறக்க உதவி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*பட்டமளிப்பு விழாவில் கே.பி.ராமலிங்கம் எம்.பி, எம்.என்.கந்தசாமி எம்.எல்.ஏ உள்ளிட்ட திரளான மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.*

## சிறு விவசாயிகளின் நலன் கருதியே இன்கோசர்வ் கூட்டுறவு நிறுவனம் இயங்கி வருகிறது சிறு, குறு, நடுத்தர தொழில் துறை செயலாளர் தகவல்

*குன்னூர், ஜூலை.15–*

*சிறு விவசாயிகள் நலன் கருதியே இன்கோசர்வ் கூட்டுறவு நிறுவனம் இயங்கி வருகிறது என்று சிறு, குறு நடுத்தர தொழில் துறை செயலாளர் கூறினார்.*

*ஆன்–லைன் ஏல மையம்*

குன்னூரில் உள்ள டீசர்வ் தேயிலை ஏல மையத்தில் 40 லட்ச ரூபாய் செலவில் ஆன் லைன் மூலம் தேயிலை ஏல முறை தொடங்கப்பட்டு உள்ளது. தமிழக ஊரக தொழில் துறை மற்றும் கால் நடை பராமரிப்பு துறை அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி ஆன்லைன் ஏலத்தை தொடங்கி வைத் தார்.

விழாவில் கூடுதல் தலைமை செயலாளரும், சிறு குறு நடுத்தர தொழில் துறை செயலாளருமான செல்வம் பேசியதாவது:–

சிறு, குறு நடுத்தர விவசாயி களின் முன்னேற்றத்துக்காக தமிழக அரசு பல்வேறு நட வடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நாட்டின் முன் னேற்றத்துக்கு விவசாய மும், தொழிலும் இரு கண் களாக உள்ளன. நமது வாழ்க்கை ஆதாரத்தை மேம் படுத்தும் வகையில் கூட்டுறவு நிறுவ னங்கள் உள்ளன.

தமிழகத்தில் சிறு, குறு நடுத் தர விவசாயிகள் அதிக அள வில் உள்ளனர். அதே போல் தொழில் வாய்ப்பும் அதிக அளவில் தமிழகத்தில் தான் வழங்கப்படுகிறது.

விவசாயிகளின் நலன் கருதியே

தொழிற் கூட்டுறவு நிறுவனங் கள் தற்போது லாபத்தில் இயங்கி வருகின்றன. வெளி மாநில மற்றும் வெளி நாட்டு தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தொழிற் கூட்டுறவு நிறுவனங்கள் இயங்கி வரு கின்றன.

தமிழகத்தின் தேயிலை உற் பத்தியில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் 17 சதவீதம் உற்பத்தி செய்கின்றன. சிறு விவசாயிகளின் நலன் கருதியே இன்கோசர்வ் கூட்டுறவு நிறுவனம் இயங்கி வருகிறது.

ரூ.2 கோடி நஷ்டம்

2 கோடி ரூபாய் நஷ்டம் அடைந்தாலும் பரவாயில்லை, விவசாயிகளின் பச்சை தேயிலைக்கு விலை கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

வெளி மாநிலத்துக்கும், வெளி நாட்டுக்கும் தேயிலை விற்பனை செய்து இந்த நஷ்டத்தை ஈடு கட்டும் நோக்கத்தில் கூடுதல் விலை கொடுக்கப்பட்டது.

இடைதரகர்களுக்கு இடம் இல்லை

டீசர்வ் ஏல மையத்தில் நடைபெறும் ஆன்–லைன் தேயிலை ஏலத்தில் இடைத்தர கர்களுக்கு இடம் கிடை யாது. இதனால் தேயிலையின் விலை உயர வாய்ப்பு அமையும். எனவே சிறு விவசாயிகள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி னார்.

**கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு தரமான பச்சை தேயிலையை சிறு விவசாயிகள் வழங்க வேண்டும் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி வேண்டுகோள்**

குன்னூர், ஜூலை.15–

கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு தரமான பச்சை தேயி லையை சிறு விவசாயிகள் வழங்க வேண்டும் என்று அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி வேண்டு கோள் விடுத்தார்.

கம்ப்யூட்டர் ஏலம்

இன்கோசர்வ் நிறுவனத்தின் டீசர்வ் தேயிலை ஏல மையத் தில் கடந்த சில ஆண்டுக்கு முன்பு கம்ப்யூட்டர் மூலம் தேயிலை ஏலம் நடத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட் டது.

கடந்த சில மாதங்களாக கம்ப்யூட்டர் ஏலமுறை நிறுத்தி வைக்கப்பட்டு வாய்மொழி ஏலம் மூலம் தேயிலை ஏலம் நடத்து வந்தது.

ஆன்–லைன் மூலம் தேயிலை ஏலம்

மத்திய அரசின் எம்.எஸ். டி.சி. நிறுவன உதவியுடன் டீசர்வ் தேயிலை ஏல மையத்தை புனரமைத்து ஆன்– லைன் மூலம் தேயிலை ஏலம் நடத்தும் முறை கொண்டு வரப்பட்டது. இந்த ஆன்லைன் தேயிலை ஏலமுறை தொடக்க விழா நேற்று குன்னூர் இன்கோசர்வ்

வளாகத்தில் நடைபெற்றது.
விழாவில் சிறப்பு விருந்தின ராக தமிழக ஊரக தொழில் துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி கலந்து கொண்டு ஆன்–லைன் தேயிலை ஏல முறையை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதா வது:–
நஷ்டம் காரணமாக
கடந்த 5 ஆண்டு காலமாக டீசர்வ் ஏல மையத்தில் கம்ப் யூட்டர் மூலம் தேயிலை ஏலம் சிறப்பாக நடைபெற்று வந்தது. கம்ப்யூட்டர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் முடிந்ததால் அந்த நிறுவனம் நஷ்டம் ஏற்படுகிறது என்று கூறி ஒப்பந்தத்தில் இருந்து விலகி விட்டது. இதனால் 2 மாத காலம் கம்ப்யூட்டர் மூலம் தேயிலை ஏலம் நிறுத்தப்பட்டது.
மத்திய அரசின் எம்.எஸ்.டி.சி. நிறுவனத்துடன் தற்போது ஒப்பந்தம் செய்யப் பட்டு ஆன்–லைன் மூலம் தேயிலை ஏலம் தொடங்கப் பட்டு உள்ளது.
இந்த முறை மூலம் இந்தியாவில் எங்கிருந்து வேண்டுமானாலும் ஏலம் கேட்க முடியும்.
இதனால் தேயிலைக்கு விலை உயரும் வாய்ப்பு உள்ளது.
ரூ.36 கோடி உயர்ந்தது
கடந்த 1996–ம் ஆண்டு வனத்துறை அமைச்சராக நான் இருந்த போது அதன் ஒரு அங்கமான டேன்டீ நிறுவ னத்தில் பொறுப்பு வகித்தேன். அப்போது டேன்டீயின் லாபம் 36 கோடி ரூபாய் உயர்ந்தது. இதனால் எனக்கு தேயிலையை குறித்து ஓரளவு தெரியும்.
தற்போது தேயிலை விலை குறைவுக்கு இயற்கை தான் காரணம். தட்ப வெப்ப நிலையினால் கென்யா, இலங்கை போன்ற நாடுகளில் தேயிலை உற்பத்தி அதிகரித்து உள்ளது. மேலும் அங்கு தரமான தேயிலை உற்பத்தி செய்கிறார்கள்.
ரூ.1½ கோடி நஷ்டம்
தேயிலை வாரியத்தின் மூலம் விலை பகிர்மான திட் டத்தின் படி பச்சை தேயி லைக்கு 6 ரூபாய் கூட விலை நிர்ணயம் செய்ய முடிய வில்லை.
ஆனால் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு பச்சை தேயிலை வழங்கும் விவசாயிகள் பாதிக்க கூடாது என்பதற்காக 1½ கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும் பரவா யில்லை என்று 7 ரூபாய் விலை கொடுக்கப்பட்டது.
இதற்கு மேல் நஷ்டம் ஏற் பட்டால் மத்திய, மாநில அரசுகள் தான் பார்க்க வேண்டும்.
தமிழகத்தில் உற் பத்தி செய்யப்படும் தேயிலை யில் 17 சதவீதம் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படு கிறது.
தேயிலை தரமானதாக இல்லை
ஆனால் சிறு தேயிலை விவசாயிகள் கூட்டுறவு தேயிலை நெடுஞ்சாலை களுக்கு வழங்கும் பச்சை தேயிலை தரமற்றதாக உள் ளது. தரமான பச்சை தேயிலையை தனியார் தொழிற்சாலைகளுக்கும், தரமற்ற பச்சை தேயி லையை கூட்டுறவு தொழிற் சாலைகளுக்கும் வழங்குகிறார் கள்.
இவ்வாறு இருக்கும் போது எப்படி லாபத்தில் இயங்க முடியும்? எனவே கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை களுக்கு தரமான பச்சை தேயிலையை வழங்க சிறு விவசாயிகள் முன்வர வேண்டும்.
இவ்வாறு அவர் கூறினார்.
விழாவில் எம்.எல்.ஏ.க்கள் சவுந்திரபாண்டியன், கோபால், கூடுதல் தலைமை செயலாளரும், சிறு குறு நடுத்தர தொழில் துறை செயலாளருமான செல்வம், தொழில் துறை கமிஷனர் சுந்தர மூர்த்தி, குன்னூர் நகரமன்ற தலைவர் ராமசாமி, கவுன்சிலர்கள் முபாரக், பழனிசாமி, செல்வம் மற்றும் அன்வர்கான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கருத்தரங்கு**

*ஊட்டி, ஜூலை.15–*

*தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை சார்பில் (அஸ்காட்) கால்நடை நோய்கள் பற்றிய கருத்தரங்கு ஊட்டியில் நடந்தது. கருத்தரங்கை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சாண்டிநல்லாவில் உள்ள ஆட்டு பண்ணையின் உதவி பேராசிரியர் கிருஷ்ணகுமார் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.*

*உதவி இயக்குனர் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு என்.எஸ்.லட்சுமணன் கால்நடை நோய்கள் (அஸ்காட்) திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் கால்நடைகளின் நோயை கட்டுப்படுத்தும் தடுப்பூசி நடவடிக்கைகளை பற்றி எடுத்துரைத்தார். உதவி பேராசிரியர் கிருஷ்ணகுமார் ஆடு வளர்ப்பு, ஆடுகளின் நோய் தடுப்பு முறை மற்றும் நீலகிரி மாவட்டத்துக்கு ஏற்ப பசுந்தீவன உற்பத்தி ஆகியவற்றை பற்றி எடுத்துரைத்தார்.*

*மேலும் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தைச் சேர்ந்த டாக்டர்கள் தியாகேஷன், பெஞ்சமின், ஈஸ்வரன் மற்றும் கால்நடை பண்ணையைச் சேர்ந்த டாக்டர்கள் நீலவண்ணன், முல்லைசெல்வன் ஆகியோர் ஆவின் திட்டப்பணிகள், நீலகிரி மாவட்டத்தில் உறைவிந்து குச்சிகள் பயன்பாடு, தீவன மேலாண்மை, கன்றுகள் பராமரிப்பு ஆகிய தலைப்பின் கீழ் பேசினார்கள்.*

*முடிவில் சுகன்யா நன்றி கூறினார்.*

**புதிய கண்டுபிடிப்புகள் சரியாக போய் சேர்வது இல்லை விவசாயிகளை மையமாக வைத்து வேளாண் கொள்கைகளை வகுக்க வேண்டும் பட்டமளிப்பு விழாவில், முன்னாள் துணை வேந்தர் செங்கப்பா பேச்சு**

*கோவை,ஜூலை.15–*

*விவசாயிகளை மையமாக வைத்து வேளாண் கொள்கைகளை வகுக்க வேண்டும் என்று கோவை வேளாண் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில், பெங்களூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் செங்கப்பா கூறினார்.*

*பட்டமளிப்பு விழா*

*கோவை வேளாண் பல்கலைக்கழக 31–வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. விழாவில் பல்கலைக்கழக இணை வேந்தரும், வேளாண்மைத்துறை அமைச்சருமான வீரபாண்டி ஆறுமுகம் கலந்து கொணடு மாணவ–மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.*

*விழாவில் சிறப்பு விருந்தினராக பெங்களூர் வேளாண் அறிவியல் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பி.ஜி.செங்கப்பா கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர்கூறியதாவது:–*

*தேசிய அளவில் பதிவு செய்யப்பட்ட உழவர் அமைப்புகளில் 2 சதவீதம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உயிர் உரங்கள் பற்றிய விழிப்புணர்வு 8 சதவீதம் பேருக்கு உள்ளது. மற்றும் குறைந்த பட்ச ஆதரவு விலை பற்றிய விழிப்புணர்வு 29 சதவீதம் பேருக்கு உள்ளது. கூட்டுறவு வங்கிகளில் 29 சதவீதம் பேர்உறுப்பினர்களாக உள்ளனர். இதில் 19 சதவீதம் பேர் கடன் பெறுகின்றனர்.*

*பசுமை புரட்சி*

*57 சதவீதம் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு திட்டம் என்றால் என்ன? என்பது பற்றியே தெரிவது இல்லை. உயர் விளைச்சல் விதைகளை 46 சதவீதம் பேர்தான் பயன்படுத்துகின்றனர். 47 சதவீதம் பேர் டீசல் டிராக்டர்களை பயன்படுத்துகின்றனர். மற்றவர்கள் மாடுகளைத்தான் பயன்படுத்துகின்றனர்.*

*நாட்டில் ஒட்டு மொத்த உற்பத்தியில் வேளாண்துறை பங்கு 16–ல் இருந்து 20 சதவீதம் குறைந்துள்ளது. தற்போது 52 சதவீதம் வேலை வாய்ப்பு இருந்தாலும் விவசாய கூலிக்கு போதிய ஆட்கள் கிடைப்பது இல்லை.*

*வேளாண்மை வளர்ச்சி விகிதம் கடந்த 1980– 90–ம் ஆண்டுவரை 3.1 சதவீதம் இருந்தது. தொடர்ந்து 1996–97–ம் ஆண்டுவரை 3.6 சதவீதமாக இருந்தது. 2004–05–ம் ஆண்டுகளில் 1.7 சதவீதமாக குறைந்தது. வேளாண் துறையை பொறுத்தவரை எதிர்கால சவால்கள் அதிகம் உள்ளன. நிலையான வேளாண் வளர்ச்சி தேவை. இதற்கு 2–வது பசுமை புரட்சி அவசியம். இதற்கு முக்கியமாக அரசு சார்பில் விவசாயிகளை மையமாக வைத்து வேளாண் கொள்கைகளை வகுக்க வேண்டும். அவ்வாறு செய்யும் போது 4 சதவீத வேளாண் வளர்ச்சியை அடைய முடியும்.*

*பண்ணை ஆராய்ச்சி*

*சிறு, குறு விவசாயிகள், விவசாய கூலி தொழிலாளர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இந்த விவசாயிகளுக்கு நீர்பற்றாக்குறை, இடப்பற்றாக்குறை, கடன் வசதிகள், நவீன இடு பொருட்கள் பற்றிய விவரம் தெரியாமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் உள்ளது. ஆகவே அவர்களுக்கு வேளாண் வளர்ச்சி, திட்டமிடுதலில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதன் மூலம் கிராமப்புற விவசாயிகள் நகர்ப்புறங்களுக்கு செல்வதை தடுக்க முடியும். புதிய கண்டு பிடிப்புகள், தொழில்நுட்பங்கள் என்பது விவசாயிகளுக்கு சரியாக போய் சேர்வது இல்லை. ஆகவே விவசாயிகளை ஈடுபடுத்தி பண்ணைகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும்.அந்தந்த பகுதி பிரச்சினைகளுக்கு ஏற்றாற் போல் புதிய தொழில்நுட்பத்தை கண்டுபிடிக்கும் வழிமுறைகளை உருவாக்க வேண்டும்.*

*இன்சூரன்சு திட்டம்*

*தற்போது வேளாண்மை துறையில் உற்பத்தியை மையமாக வைத்து செயல்படும் நிலை உள்ளது. ஆனால் அதற்கு அடுத்த கட்டமாக மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் நிலைக்கு வரவேண்டும். அதாவது பதப்படுத்துதல், சேமிப்பு கிடங்கு, சந்தை படுத்துதல் போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும். இதனால் விளை பொருட்களுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும்.*

*பாசன நீர் மேலாண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நுண்பாசன முறைகளை கடைபிடிக்க வேண்டும். உழவர்களுக்கு என்று இன்சூரன்சு திட்டங்களை அறிமுகம் செய்ய வேண்டும். கூட்டுறவு வங்கிகளில் விவசாய உற்பத்திக்கு மட்டும் இல்லாமல், சேமிப்பு கிடங்கு, சந்தைப்படுத்துதல் போன்றவற்றுக்கும் கடன் வசதி அளிக்க வேண்டும். விவசாய சுய உதவிக்குழுக்களை அதிகப்படுத்தவேண்டும். வேளாண் தொழில் நுட்பங்களை விவசாய சுய உதவிக்குழுக்களுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும். கால நிலை மாற்றத்துக்கு ஏற்றாற் போல் கொள்கைகளை உருவாக்க வேண்டும். வணிக ரீதியான வேளாண்மையை ஊக்குவிக்க வேண்டும்.*

*இவ்வாறு செங்கப்பா கூறினார்.*

**விவசாய பயிர்களை தாக்கி சேதப்படுத்தும் பூச்சி நோய்களை கட்டுப்படுத்துவது எப்படி?விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை**

*கோவை, ஜூலை.15*

*விவசாய பயிர்களை தாக்கி சேதப்படுத்தும் பூச்சி நோய்களை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.*

*மாவுப்பூச்சி தாக்குதல்*

*கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழக பூச்சியியல் துறை பாதுகாப்பு மையம் சார்பில் விவசாய பயிர்களை தாக்கி அழிக்கும் பூச்சி நோய் தாக்குதல் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக ராமநாதபுரம், கோவில்பட்டி, சேலம் ஆகிய பகுதிகளில் விளையும் விவசாய பயிர்களான கரும்பு, நெல், பருத்தி ஆகியவற்றை தாக்கும் பூச்சிகளை*

கட்டுப்படுத்துவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளது.

ராமநாதபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் விளையும் பருத்தியில் மாவுப்பூச்சியின் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்த வேப்பஎண்ணெய் 2 சதம் அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணெய் சோப் 25 கிராம் எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இதே போல் பூச்சி கொல்லிகளான புரோபினோபாஸ் அல்லது குளோர்பைரிபாஸ் அல்லது டைமீதோயேட் 2 மில்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவேண்டும்.

பருத்தி

கோவில்பட்டி பகுதியில் பயிரிடப்பட்டு உள்ள பி.டி ரக பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் குறிப்பாக இலைப்பேன் தாக்குதல் அதிக அளவில் காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு இமிடோகுளோபிரிட் அல்லது மிதைல் டெமிடான் 25 இசி அல்லது டைமீதோயேட் 200 மில்லி எடுத்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இந்த நோயை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாற்றை 10 கிலோ வீதம் எடுத்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கலாம்.

சேலம் மாவட்டத்தில் நெல்லில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் கரும்பில் இடைக்கணுப்புழு தாக்குதல் அதிக அளவில் காணப்படுகிறது. நெல்லில் உள்ள இலைச்சுருட்டுப்புழுவை கட்டுப்படுத்த பெனிட்ரோதையான் 400 மில்லி அல்லது மானோகுரோட்டோபாஸ் 400 மில்லி அல்லது பென்தையான் 200 மில்லியை எடுத்து ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். இந்த நோயை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 10 கிலோ வீதம் ஒரு ஏக்கருக்கு உபயோகித்து கட்டுப்படுத்தலாம்.

ஒட்டுண்ணி

கரும்பில் காணப்படும் இடைக்கணுப்புழு நோயை கட்டுப்படுத்த இதன் தாக்குதல் அதிகமாக காணப்படும் இடங்களில் டிரைக்கோகிரம்மா 1 சி.சி என்ற முட்டை ஒட்டுண்ணி அட்டைகளை ஏக்கர் முழுவதும் கட்ட வேண்டும்.

இவ்வாறு கட்டப்படும் முட்டை ஒட்டுண்ணிகளை கரும்பு விளைந்த நான்காம் மாதம் முதல் 15 நாட்கள் இடை வெளியில் வயல்களில் கட்ட வேண்டும். இதே போல் கரும்பு வயல்களில் மழை பெய்யும் காலங்களில் எறும்புகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். இதை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி அட்டைகளை காகித குவளைகளை கொண்டு வயல்களில் கட்டி கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு கோவை வேளாண் பல்கலைக்கழகம் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளது.

**கோவையில் இன்று தொடங்குகிறது விதைச்சான்று அதிகாரிகளுக்கு பயிற்சி**

கோவை,ஜூலை.15–

விதைச்சான்று துறையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு ஆண்டுதோறும் புத்தூட்ட பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 40 விதைச்சான்று அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

கோவை தடாகம் ரோட்டில் உள்ள விதைச்சான்று அலுவலகத்தில் இயக்குனர் கருணாநிதி தலைமையில் இன்று(வியாழக்கிழமை) மற்றும் நாளை(வெள்ளிக்கிழமை) ஆகிய 2 நாட்கள் பயிற்சி நடைபெற உள்ளது. பயிற்சியின் போது விதைச்சான்று நடைமுறைகள், விதை ஆய்வு நடைமுறைகள், விதைப்பரிசோதனை, டி.என்.ஏ. பிங்கர் பிரிண்ட், அங்கக சான்றளிப்பு, வயல் வெளிப்பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. பயிற்சியை விதைச்சான்றுத்துறை உயர்

அதிகாரிகள் மற்றும் வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அளிக்கிறார்கள். இந்த தகவலை உதவி இயக்குனர் பழனிக்குமார் தெரிவித்து உள்ளார்.

**வேளாண் பொருட்களை விற்பனை செய்ய விலை முன்னறிவிப்புகளை பயன்படுத்தி அதிக லாபம் பெறலாம் விவசாயிகளுக்கு ஊரக மேம்பாட்டு மைய அதிகாரி ஆலோசனை**

கோவை, ஜூலை.15–

விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் வேளாண் பொருட்களை விற்பனை செய்ய வேளாண் பல்கலைக்கழகம் அறிவிக்கும் விலை முன்னறிவிப்புகளை பயன்படுத்தி அதிக லாபம் பெறலாம் என்று பல்கலைக்கழக ஊரக மேம்பாட்டு அதிகாரி ஆலோசனை வழங்கி உள்ளார்.

சந்தை தகவல்

இந்தியாவில் மொத்த வேளாண் உற்பத்தி கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது. உற்பத்தி உயர்ந்த அளவுக்கு விவசாயிகளின் வருமானமும் வாழ்க்கை தரமும் உயரவில்லை. இதற்கு முக்கிய காரணம் விவசாய விளை பொருட்களின் விற்பனையில் உள்ள குறைபாடே ஆகும். இதில் சந்தை தகவல் பற்றிய விவரங்கள் உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு சென்றடையாததே ஆகும். சரியான விற்பனை தகவல் மற்றும் முறைகள் மூலம் விவசாயிகள் அதிக லாபம் ஈட்ட முடியும். சந்தை தகவல்கள் குறித்த விவரங்களை அறிய கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் கடந்த 5 ஆண்டுகளாக விவசாய விளை பொருட்களுக்கு விலை முன்னறிவுப்பு செய்து வருகிறது.

இது குறித்து பல்கலைக்கழக வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு மைய இயக்குனர் அஜ்ஜன் கூறியதாவது:–

விவசாய பயிர்

வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் ஊரக மேம்பாட்டு மையம் சார்பில் விவசாய மற்றும் தானிய பயிர்களான நிலக்கடலை, சின்ன வெங்காயம், மிளகாய், உளுந்து, மஞ்சள், காய்கறிகள், சூரியகாந்தி, கரும்பு, மக்காச்சோளம், எள், பருத்தி, உருளைக்கிழங்கு, கம்பு, கொத்தமல்லி மற்றும் கொண்டக்கடலை ஆகிய பயிர்களுக்கு விலை முன்னறிவிப்பு செய்து வருகிறது.

விவசாயிகள் ஒரு குறிப்பிட்ட பயிரை விதைப்பதற்கு முன்பாகவும், அந்த பயிர் அறுவடை ஆகும் சமயத்தில் என்ன விலை கிடைக்கும் என்று முன்னறிவிப்பு செய்து வருகிறது. அதே போல் பயிர் விளைந்து அறுவடை செய்யும் போது உடனடியாக விற்கலாமா அல்லது சேமித்து விற்கலாமா என்று ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விதைப்பு மற்றும் விற்பனை பற்றி விவசாயிகள் சரியான முடிவுகளை எடுக்க இந்த மையம் உறுதுணையாக இருந்து வருகிறது.

விலை முன்னறிவிப்பு

கடந்த 5 ஆண்டுகளில் இந்த மையம் சார்பில் விவசாய விளை பொருட்கள் குறித்து 85 விலை முன்னறிவிப்புகள் வெளியிடப்பட்டு உள்ளன. இதே போல் கடந்த 15 ஆண்டுகளாக ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் நிலவும் விலை நிலவரங்கள் பெறப்பட்டு கம்ப்யூட்டர் வாயிலாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த ஆய்வு முடிவுகள் முன்பேர வர்த்தக விலைகளுடன் ஒப்பீடு செய்யப்படுகின்றன. இதை தவிர முக்கிய வர்த்தகர்களிடம் சந்தை விலை நிலவரம் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதே போல் இந்திய அரசின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கைகள் ஆராயப்பட்டு அதன் காரணமாக உள்நாட்டின் விவசாய பொருட்களுக்கு விலை எவ்வாறு மாறும் என்று கணிக்கப்படுகிறது. இவ்வாறு பல்வேறு நிலைகளில் விலை நிலவரங்கள் ஆராயப்பட்டு அதன் பின்னரே விலை முன்னறிவிப்பு வெளியிடப்படுகின்றன.

கூடுதல் லாபம்

*இந்த மையம் மூலம் வெளியிடப்பட்ட விலை முன்னறிவிப்புகள் 90 முதல் 98 சதவீதம் வரை சந்தை விலையுடன் ஒத்துப்போவதால் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து உள்ளது. கடந்த 2009–ம் ஆண்டு டிசம்பர் மாதம் மக்காச்சோளம் பற்றிய விலை முன்னறிவிப்பு வெளியிடப்பட்டது. அதில் மக்காச்சோளத்தின் விலை 2009–ம் ஆன்டு டிசம்பர் மாதம் வரை குவிண்டாலுக்கு ரூ.900 வரையிலும், 2010–ம் ஆண்டு ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை குவிண்டாலுக்கு ரூ.840 முதல் ரூ.900 ஆகவும், மார்ச் மாதத்துக்கு பிறகு விலை குவிண்டாலுக்கு ரூ.1,000 தாண்டும் என்றும், விவசாயிகள் மக்காச்சோளத்தை சேமித்து வைத்து விற்றால் அதிக விலை பெறலாம் என்று முன்னறிவுப்பு செய்யப்பட்டது.*

*இதன்படி டிசம்பர் மாதம் குவிண்டாலுக்கு ரூ.890 ஆகவும், ஜனவரி முதல் மார்ச் வரை ரூ.885–ல் இருந்து ரூ.900 வரை விற்பனையானது. அதே போல் ஏப்ரல் மாதத்தில் விலை ஏறுமுகமாகவே இருந்தது. ஜூன் முதல் வாரத்தில் ரூ1,025–க்கு விற்பனை ஆனது. இந்த மையத்தின் தகவல்களை பயன்படுத்தி உடுமலை பகுதியில் உள்ள மக்காச்சோள விவசாயிகள் ஹெக்டேருக்கு ரூ.11 ஆயிரம் வரை கூடுதல் லாபம் பெற்றனர். இதே போல் 2009–ம் ஆண்டு அக்டோபர் மாதம் மஞ்சள் விலை உச்சத்தை அடையும் என்று விலை முன்னறிவிப்பு செய்யப்பட்டது. அதன்படி மஞ்சள் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்தது. இந்த மையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள முடிவுகள் அனைத்தும் 90 முதல் 98 சதவீதம் வரை ஒத்துப்போகின்றன.*

*எனவே விவசாயிகள் வேளாண் விலை பொருட்களின் விதைப்பு மற்றும் விற்பனை குறித்த முடிவுகளை எடுக்க இந்த மையத்தின் முன் அறிவிப்புகளை பின்பற்றினால் அதிக லாபம் பெறலாம்.இவ்வாறு அஜ்ஜன் கூறினார்.*

***ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை தேயிலை உற்பத்தி 19 சதவீதம் உயர்வு உபாசி ஆராய்ச்சி மைய உதவி இயக்குனர் தகவல்***

*குன்னூர், ஜூலை.15–*

*ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை தேயிலை உற்பத்தி 19 சதவீதம் உயர்ந்துள்ளது என்று உபாசி ஆராய்ச்சி மைய உதவி இயக்குனர் கூறினார்.*

*ஜூன் மாதம் உகந்த தட்ப வெட்ப நிலை*

*இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை தேயிலை வளர்ச்சிக்கு தட்பவெப்ப நிலை உகந்ததாக இருந்தது.*

*இதைத்தொடர்ந்து பச்சை தேயிலை மகசூல் இந்த கால கட்டங்களில் அதிகரித்தது.*

*உச்சக்கட்டமாக கடந்த மே மாதத்திலும், ஜூன் மாதத்திலும் பச்சை தேயிலை யின் வளர்ச்சி பருவமாக இருக்கும்.*

*சிறு விவசாயிகள் பாதிப்பு*

*இதனால் பச்சை தேயிலை மகசூல் அதிகரித்து இருந்தது. தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலையை வாங்க இயலாத நிலை ஏற்பட்டது.*

*இதனால் பச்சை தேயிலை முற்றி போனது. எனவே அவைகளை அறுத்து வீச வேண்டிய நிலை சிறு தேயிலை விவசாயிகளுக்கு உருவானது. பச்சை தேயிலையின் விலை யும் குறை வடைந்து சிறு தேயிலை விவசாயிகள் கடுமை யாக பாதிக்கப்பட்டனர்.*

*தேயிலை மகசூல் அதிகரிப்பு குறித்து உபாசி தேயிலை ஆராய்ச்சி மண்டல உதவி இயக்குனர் டாக்டர் ராதா கிருஷ்ணன் கூறியதாவது:–*

*மகசூல் அதிகரிப்பு*

*இந்த ஆண்டு பெய்த பரவ லான மழை, சூரிய ஒளி, மித மான தட்பவெப்ப நிலை ஆகியவை நிலவியது. இதன் காரணமாக தேயிலை தோட்டங் களில் பச்சை தேயிலையின் மகசூல் அதி கரித்தது.*

கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை உள்ள 6 மாதங்களில் 25 செ.மீ. மழை பதிவு ஆகி உள்ளது. கடந்த ஆண்டு 30 செ.மீ. மழை பதிவாகி இருந்தது.

19 சதவீதம் அதிகரிப்பு

கடந்த 2009–ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 6.44 மில்லியன் கிலோகிராம் தேயிலை தூள் உற்பத்தியாகி உள்ளது. இந்த ஆண்டு கடந்த 6 மாத காலத்தில் 7.63 மில்லியன் கிலோ கிராம் தேயிலை தூள் உற்பத்தியாகி உள்ளது.

இதை வைத்து பார்க்கும் போது கடந்த 2009–ம் ஆண்டை விட இந்த ஆண்டில் 1.9 மில்லியன் கிலோ கிராம் தேயிலை தூள் கூடுத லாக உற்பத்தியாகி உள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரையிலான 6 மாத காலத்தில் 19 சதவீதம் தேயிலை தூள் உற்பத்தி அதிகரித்து உள்ளது. கடந்த 5 ஆண்டுகளை ஒப்பிடும் போது 8 சதவீத தேயிலை உற்பத்தி கூடுதலாக உள்ளது.

கவாத்து பணி

இந்த கூடுதல் தேயிலை மகசூலை பெரிய தேயிலை எஸ்டேட்டுகள் தொழில் நுட்ப முறையில் சாதக மாக பயன்படுத்தி உள்ளன. சிறு தேயிலை விவசாயிகளுக்கு போதிய வசதி இல்லாததால் தேயிலை மகசூல் அதிகரிப்பால் பாதிக் கப்பட்டு உள்ளனர்.

இதனால் சிறு விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் வளர்ந்த நிலையில் உள்ள பச்சை தேயி லையை கவாத்து செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்கண்டவாறு டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.